Y.M.C.A

# யாழ் தொழில் நுட்பக் கல்லூரி 1991 அனுமதி முடிவுத் திகதியை நீடிக்க அதிபர் கோரிக்கை

யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியில் உயர் தேசிய டிப்புளோமா, தேசிய டிப்புளோமா, உயர் தொழில் மற்றும் தேசிய சான்றிதழ் பயிற்சிநெறிகள் (1991 ஆம் கல்வி ஆண்டு) ஆகியவற்றிற்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்ப முடிவுதிகதியை நீடிக்குமாறு இக் கல்லூரி அதிபர் திரு. சி. இராஜேந்திரா உயர் கல்வி அமைச்சு தொழில்நுட்ப கல்விப் பணிப்பாளரைக் கேட்டுள்ளார். யாழ்ப்பாணம் உட்பட 23 தொழில் நுட்பக் கல்லூரிகளில் இப்பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் 28.09.90ல் வெளியான வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதி 28.10.90 என அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இவ்வர்த்தமானிப் பத்திரிகை வடபகுதியில் இம்மாதம் 5 ஆம் திகதிக்குப் பின்னரே கிடைக்கக் கூடியதாக இருந்தது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இங்கு முத்திரைகளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு —04 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு | விலை ரூபா:- 3-50

# முரசொலி

முரசு 04 ஒலி 269 வெள்ளி 09-11-1990 (ஐப்பசி 23) ந. ஆதிர் 20

# யுத்தம் நடைபெறுகின்றபோது பொதுமக்கள் இறப்பது சகஜம்

## அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன சொல்கிறார்

யுத்தம் நடைபெறும் போது பொது மக்கள் இறப்பது சகஜமே, கடந்த காலங்களில் உலக யுத்தங்களிலும் பொது மக்கள் அதிகமாக இறந்தது தெரியாதா என்று பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் கூறினார்.

''முல்லைத்தீவுக்கடற் பகுதியில் நடமாடும் மர்மக் கப்பல் இன்னமும் அடையாளம் காணப்படவில்லை, அது என்ன நோக்கத்திற்காக முல்லைத்தீவு அருகே நிற்கிறது என்பது 'குறித்தும் தெளிவாகவில்லை' என்றும் அமைச்சர் கூறினார்.

இலங்கைக்கான லிபியாவின் உதவி குறித்து செய்தியாளர்கள் கேட்டபோது ''லிபியாவிடம் உதவி கேட்டோம் எனினும் இதுவரை உதவிகிடைக்கவில்லை'' என அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்தியாவில் நடைபெற்ற அரசியல்மாற்றங்கள்குறித்துக் கருத்து வெளியிட்ட அவர் —04 ஆம் பக்கம் பார்க்க

## போதனா வைத்தியசாலையில் இன்று முதல் நோயாளர் அனுமதி

### பார்வையிட விசேட 'பாஸ்' தேவை

யாழ் போதனா வைத்தியசாலையில் இன்று காலை 6 மணி முதல் நோயாளர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என்று வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

வார்ட்டில் அனுமதிக்கப்படும் நோயாளருடன் தங்கியிருப்பவருக்கு வெளிநோயாளர் பிரிவில் வைத்து இன்று முதல் 'செஞ்சிலுவைச் சங்க விசேட பாஸ்' வழங்கப்படும்.

இந்த அனுமதிப்பத்திரத்தை (பாஸ்) வைத்தே நோயாளர்களைப் பார்வையிடலாம். ஒரு நோயாளியை ஒருவரே பார்வையிடலாம்.

வேறு எவராவது நோயாளியை பார்வையிட விரும்பினால் இந்த அனுமதிப்பத்திரத்தை முதலில் பார்ப்பவரிடமிருந்துபெற்றுக் கொண்டே உள்ளே செல்ல வேண்டும்.

நோயாளர்களைப் பார்வையிடும் நேரம் நண்பகல் 12-1 மணி,மாலை 5-6 மணிவரையும் மட்டுமே எனவும் அறிவிக்கப்படுகிறது.

—04 ஆம் பக்கம் பார்க்க

## யாழ் நகர அழிவுப் படங்கள் லண்டன் நகரில் காட்சி

லண்டனில் பல பகுதிகளில் யாழ்நகரின் அழிவுகள் அடங்கிய வீடியோப் படம் காண்பிக்கப்படுவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ்நகர், கொட்டடி போன்ற இடங்களில் பொம்மர் தாக்குதல் நிகழ்த்திய காட்சிகளை அங்குள்ள தமிழர்கள் வீடியோ மூலம்பார்க்க முடிந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை, மேற்கு ஜேர்மனியின் ஓபர்சுடான் மாநிலத்தில் தமிழ்ப்பகுதிகளில் அரசு நடத்தும் வன்செயல்களைக் கண்டித்துப் பெரும் ஊர்வலமொன்றை அங்கு வாழும் தமிழர்கள் கடந்தமாதம் நடாத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ப-1)

## மன்னார்க் கடலில் ராணுவப்படகு ஆர். பி. ஜி. தாக்குதலால் சேதம்

நேற்று முன்தினம் மன்னார் கடற்பகுதியில் புலிகள் நடாத்திய தாக்குதலில் ராணுவத்தினரின் இரு படகுகள் சேதமடைந்துள்ளன.

நேற்று முன்தினம் காலை 8.30 மணியளவில் புத்தளம்-முள்ளிக்குளம் கடற்பகுதியில் (குதிரை மலைக் கடல்) ராணுவத்தினர் இரு படகுகளில் வந்தபோது கரையில் இருந்து 500 .யார் தூரத்தில் வைத்து விடுதலைப் புலிகள் ஆர். பி. ஜி. தாக்குதலை மேற்கொண்டனர், இதனால் படகு இயந்திரம் சேதமானது.

இதையடுத்து முன்னே வந்த ராணுவத்தினரின் படகு இப்படகைக் கட்டி இழுத்துச் செல்ல முற்பட்ட போது புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இதனால் அவர்களது முயற்சியும் கை —04 ஆம் பக்கம் பார்க்க

## இப்படியும் ஒரு தண்டனை

திருவையாறு மகாவித்தியாலயத்தில் பணிபுரியும் ஓர் ஆசிரியையின் அசிங்கமான நடவடிக்கைகளால் இங்கு மாணவிகள் கல்வி பயில தயங்குகின்றனர். கரும்பலகையைச் சுத்தம் செய்ய 'டஸ்ரர்' கொண்டு வராததால் மாணவிகளின் சட்டையைக் கழற்றி கரும் பலகையைச் சுத்தம் செய்யுமாறு மிகக்கண்டிப்பாக உத்தரவிட்டாராம் ஆசிரியை, மாணவர்கள் மத்தியில் இவ்வாறு அசிங்கமான —04 ஆம் பக்கம் பார்க்க

## குவைத்திலிருந்து திரும்பியோருக்கு நிவாரணம் வழங்கத் திட்டம்

குவைத்திலிருந்து அகதிகளாக நாடு திரும்பியவர்களிற்கு உதவி வழங்குவதற்காக திட்டம் ஒன்றை யாழ் செஞ்சிலுவைச் சங்கம் தயாரிக்கவுள்ளதாக அதன் தலைவர் டாக்டர் தெய்வேந்திரம் தெரிவித்தார்.

குவைத்திலிருந்து நாடு திரும்பியதற்கான தகுந்த அத்தாட்சிகளை சமர்ப்பித்து —04 ஆம் பக்கம் பார்க்க

## மாவிட்டபுரத்தில் நேற்று பொம்மர்த்தாக்குதல்

மாவிட்டபுரம் பகுதிகளில் நேற்றுக் காலை பொம்மர் ஒன்று நான்கு குண்டுகளை வீசியது.

இவை மாவிட்டபுரம் அரசடி அம்மன் கோயிலுக்கு அருகில் வீழ்ந்து வெடித்ததால் சிலவீடுகள் சேதமடைந்தன.

சீ-பிளேன் ஒன்றும் இதன் பின்பு இப்பகுதியை நீண்ட நேரம்வட்டமிட்டுச்சென்றது. (48, ப10)

## கிளிநொச்சியை நோக்கி ஆனையிறவிலிருந்து ஷெல்

கிளிநொச்சியை நோக்கி நேற்றுமுன்தினம் இரவு ஆனையிறவு முகாமிலிருந்து ஆட்லறி ஷெல்கள் ஏவப்பட்டன.

இதனால் இரவு இரவாக மக்கள் நகரைவிட்டு கிராமங்களுக்குச் சென்றனர் கிளிநொச்சி ஆஸ்பத்திரிநோயாளிகளும் ஊழியர்களும் அச்சமடைந்தனர்.

கிளிநொச்சி மின்சார சபை அருகில் ஷெல்கள் தொடர்ச்சியாக விழுந்து வெடித்தன. (ப-6)

## மாவீரர் நினைவாக பாதயாத்திரை

மாவீரர் நினைவாக வடமராட்சிப் பிரிவில்விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியி —04 ஆம் பக்கம் பார்க்க

வாசகப்பெருமக்களே!

நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்த யாழ் குடாநாட்டு வரைபடம் நாளைய முரசொலியுடன் வெளிவருகிறது.

அது ஒரு முரசொலி அன்பளிப்பு: கேட்டுப் பெறுக!

'முற்றுப் பெறாத யுத்தம்.....? விவரணம் நாளை தொடரும்.

## முரசொலிக்கு வந்த கடிதம்

### மினி இறைச்சிக்கடையில் தரம் கெட்ட விற்பனை

ஆசிரியர்,
முரசொலி.

அண்மைக் காலமாக யாழ் நகரின் பல இடங்களில் புற்றீசல் போல பல 'மினி' மாட்டிறைச்சிக் கடைகள் தெரு ஓரங்களில் போடப்பட்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாய் உள்ளது.

இவ்வித விற்பனை நிலையங்கள் தகுதி வாய்ந்த உத்தியோகஸ்தர்களினால் உரிய முறையில் பரிசோதிக்கப்படாமையினால் சுகாதாரக் கேடுகள் மலிந்ததாய் உள்ளதுமல்லாமல், தரத்தில் நிறையில் பலவித மோசடிகள் நடைபெற்று வருகின்றன.

கடந்த சனி ஞாயிற்றுக்கிழமைகளில் சுண்டிக்குளிப் பகுதியில் உள்ள மாட்டிறைச்சிக் கடை ஒன்றில் நோய்வாய்ப்பட்டுச் சாகும்தறுவாயில் இருந்த பசுமாடு ஒன்றின் இறைச்சிவிற்பனை செய்யப்பட்டுள்ளது.

நோயுற்ற மாட்டின் இறைச்சியை உண்பதினால் தலைவலி. வீக்கம், சொறி, வாந்திபோன்ற வியாதிகளும், ரத்தசோகை, உடல்பொருமுதல், எலும்புருக்கி, உணவுக்குழாயில் புற்றுநோய், கல்லீரலில் ''சிரோஸிஸ்'' போன்ற இலகுவில் குணப்படுத்த முடியாத கொடிய வியாதிகளும் உருவாக இடமுண்டு என்று மருத்துவ நிபுணர்கள் கூறுகிறார்கள்.

எனவே இத்துடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள், சமூக சேவையாளர்கள், பணம் சம்பாதிப்பதையே நோக்கமாகக் கொண்டு, மனிதாபிமானம் அற்ற முறையில் சமூகத்திற்குத் துரோகம் செய்யும் வியாபாரிகளைத் திருத்தி நல்வழிப்படுத்த உடன் ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

ஈச்சமோட்டை. ஜே. செபஸ்தியாம்பிள்ளை.
(சமாதான நீதவான்)

---

பட்டதாரி நியமனம் பெறாத

# சகல பட்டதாரி ஆசிரியர்களுக்கும் ஜனவரிமுதல்விசேடசம்பளஉயர்வு!

பட்டதாரி ஆசிரிய நியமனத்தைப் பெறாது தற்பொழுது பாடசாலைகளில் கடமைபுரிந்து வரும் சகல பட்டதாரிஆசிரியர்களுக்கும் ஜனவரி முதல் சம்பள அதிகரிப்பு வழங்கப்படவுள்ளது.

இவர்களுக்கு மூன்று வருடாந்த சம்பள உயர்வுகளுக்கு சமமான தொகை சம்பள உயர்வாக வழங்கப்படவுள்ளது.

ஆசிரிய பயிலுநர்களாக சேர்த்துக்கொள்ளப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கும் இந்த சம்பள அதிகரிப்பு வழங்கப்படவுள்ளதாக உயர் கல்வி அமைச்சு நேற்று அறிவித்தது.

---

### பயிற்சி ஆசிரியர் ஒன்றியம் அமைப்பு

சமூக நலனை அடிப்படை நோக்கமாகக் கொண்டு செயலாற்றும் வகையில் கோப்பாய், பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் பயிற்சி ஆசிரியர் ஒன்றியங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை பயிற்சி ஆசிரியர் ஒன்றியத் தலைவராக அ. சித்திரவேலும், செயலாளராக செல்வி பொ. இந்திராணியும், உப- தலைவராக ஏ. மரியதாசனும், துணைச் செயலாளராக செல்வி எம். ஜே ஜீவானந்தனும், பொருளாளராக செல்வி எம். தயாளினியும், இணைப்பதிப்பாசிரியர்களாக இ. கமலநாதன், செல்வி குயின்சைலா ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

பலாலி ஆசிரிய கலாசாலைப் பயிற்சி ஆசிரியர் ஒன்றியத் தலைவராக க. பரமானந்தனும், உப- தலைவராக அ வரதராஜனும், செயலாளராக நீ. சுசிலகுமாரியும், உப- செயலாளராக க. சுந்தரலிங்கமும், பொருளாளராக யோ. வசந்தியும், இணைப்பதிப்பாசிரியர்களாக கு. ஸ்ரீ ராகவராஜன், த. விமலாதேவி ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர், (16)

### கோவளம்கடலில் மீனவர் சடலம்

காரைநகர் கோவளம் வெளிச்சவீட்டுக் கடற்கரை முனைப்பகுதியில் இருந்து சுமார் 50யார் தூரத்தில் பெண் ஒருவரின் சடலம் நீரோட்டத்துடன் சென்றதாக அப்பகுதி மீனவர்கள் தெரிவித்தனர்.

நிர்வாணமான நிலையில் நீரில் மிதந்து சென்ற சடலத்தின் ஒருபக்கத் தோற்பட்டையில் சிராய்ப்புக் காயங்களும், கழுத்தில் சிலுவையுடனான கறுப்புநிறச் சங்கு மாலை ஒன்றும் காணப்பட்டதாகக் கரையோர மீன்பிடிப்பில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் தெரிவித்தனர். (ப-31)

### புதுக்குடியிருப்பில் மண்டுப் பற்றையால் விவசாயிகள் அவலம்

புதுக்குடியிருப்புக் கிராமத்தில் வெட்டப்படாது மண்டுக்காடுகள் போல் வளர்ந்துள்ள நாயுண்ணிப் பற்றைகளால் நிலக்கடலை, பயறு, கௌபி போன்ற தானியங்களைப் பயிரிட்டவர்கள் பன்றி,முயல் போன்ற மிருகங்களினால் மிகுந்த கஷ்டத்துக்குள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏக்கர்க் கணக்கில் குடிமனைகளுக்கிடையே உள்ள இப்பற்றைகளினால் தாங்கள் பயிரிட்ட தானியங்களை பாதுகாப்பதில் விவசாயிகள் மிகுந்த சிரமத்துக்குள்ளாகி வருகிறார்கள்.

இதைத்தவிர இக்கிராமத்தில் உள்ள வேட்டைக்காரர் சிலர் இந்த மண்டுப்பற்றைகளை நோக்கி மிருகங்களுக்கு குறிவைத்துச் சுடுவதால் சன்னங்கள் இலக்குத் தவறி குடிமனைகளை நோக்கி வந்துவிடுமோ என்ற பயப்பீதியுடன் வாழும் இம்மக்கள் குடிமனைகளுக்குள் சென்று வேட்டையாடுவது-தடைசெய்யப்பட வேண்டும் எனவும், மண்டுக்காடுகளாக வளர்ந்திருக்கும் மூக்குத்திப்பூண்டு, நாயுண்ணிச் செடி போன்ற பற்றைகளை அக்காணிக்குரியவர்கள் வெட்டி வெளியாக்கிவிட வேண்டும் எனவும் கேட்டுள்ளனர். (16)

### மரக்கன்றுகள் விநியோகம்

4000 மரக்கன்றுகள் மாவீரர் விழா வாரத்தை முன்னிட்டு இலவசமாக விநியோகிக்கப்படவுள்ளன.

நவம்பர் 23ந் திகதி வெள்ளிக்கிழமை வலிதென்மேற்கு சனசமூக நிலையங்களின் சமாஜத் தலைவர் செகராசசேகரம், தனது நாற்று மேடையிலிருந்து மரக்கன்றுகளை முள்ளானையில் விநியோகிக்கவுள்ளார்.

மா, பலா, வேம்பு, மலைவேம்பு, இலுப்பை, அகத்தி, லபுடு, நெல்லி, கமுகு, புளி, போன்ற பயன்தரு மரக்கன்றுகள் வழங்கப்படவுள்ளன.(37)

### இடம்பெயர்ந்தோர் தபால்கள்

யாழ்ப்பாணம் பிரதம தபாலக நிர்வாக எல்லைக்குட்பட்ட தபால் விநியோகப் பகுதிகளில் உள்ள இடம் பெயர்ந்த பகுதிகளான ஆஸ்பத்திரிவீதி,நவீனசந்தை, மின்சார நிலைய வீதி, ஸ்ரான்லிவீதி, கஸ்தூரியார் வீதி (கன்னாதிட்டிச் சந்தி வரை), மணிக்கூட்டு வீதி, கே. கே. எஸ். வீதி (சிவன் கோயில்வரை), யாழ் பள்ளிவாசல் ஒழுங்கை, கன்னாதிட்டி, யாழ் 1-ம், -2ம்,3-ம், 4-ம் குறுக்குத் தெருக்கள், சப்பல்வீதி ஆகிய இடங்களிலிருந்துஇடம்பெயர்ந்தவர்களது கடிதங்கள் தபாலகத்தில் வேலை நாட்களில் காலை 10 மணி தொடக்கம்.முற்பகல் 12 மணிவரை பெற்றுக் கொள்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக பதில் பிரதம தபால் அதிபர் எம். தேவசகாயம் தெரிவித்துள்ளார்.

இடம் பெயராதவர்களின் கடிதங்கள் தபால் சேவகர்களால் அவர்களது இல்லங்களுக்கு வழமைபோல் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. (33)

### மீண்டும் தங்குமட வேலைகள்

தீவுப்பகுதி-அராலி போக்குவரத்திற்காக அராலிதெற்குத் துறையில் கட்டப்பட்ட பிரயாணிகள் தங்குமடம் மீண்டும் புதுப்பித்துக் கட்டும் வேலை ஆரம்பமாகியுள்ளது.

முன்னர் கடற்பிரயாணம் நிறுத்தப்பட்டு, பண்ணை வீதி திறக்கப்பட்டதும் மக்கள் அராலித் துறையூடாக பிரயாணம் செய்வது நிறுத்தப்பட்டபின்பு மேற்படி தங்கு மண்டபம் விஷமிகளால் இடிக்கப்பட்டு முற்றாக சேதமாக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### விவசாயிகள், மீனவர் பாதிப்பு

முல்லைத்தீவுப் பகுதியில் பெய்த அடைமழையினால் பயிரழிவு பெருமளவு ஏற்பட்டுள்ளது. வயல் நிலங்கள் பெருமளவு நீரில் மூழ்கியுள்ளன. இதனால் விவசாயிகளுக்கு பெருமளவு நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

இதேபோன்று ஒருபுறம் கடல் கொந்தளிப்பு மறுபுறம் கடற்படையினரின் கெடுபிடி காரணமாக கடற்றொழிலாளரின் வருவாயும் மிகவும் குறைந்துள்ளது.

இதன் காரணமாக விவசாயம்,மீன்பிடி என்பன பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன 43


### சிறு விளம்பரம்

சேவை

தரமான போட்டோஸ்ரற், றோணியோ வேலைகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள். ''ஸ்கைலைன்ஸ்'' 281B, மணிக்கூட்டுக் கோபுரவீதி, யாழ்ப்பாணம். ''Sky-lines' 281B, Clock Tower Road, Jaffna. (ஏஜென்சி தபாற் கந்தோர் அருகாமை). 11025


### மீன் தட்டுப்பாடு; காரணம்

### கடற்கொந்தளிப்பு கடற்படைக் கெடுபிடி

யாழ் மாவட்டத்தில் கடற்படையினரின் கெடுபிடி, கடற் கொந்தளிப்பு ஆகியவற்றின் காரணமாக மீன் வகைகளுக்குப்பெருமளவு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

காங்கேசன்துறைதொடக்கம் மயிலிட்டி, தொண்டமானாறு, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, குடத்தனை, செம்பியன்பற்று, தாழையடி, கட்டைக்காடு ஆகிய இடங்களை உள்ளிட்ட சுண்டிக்குளம் வரையிலான கடற்பிராந்தியத்தில் தற்போது கடற் கொந்தளிப்பு நிலவி வருவதால் கடற்றொழிலாளர்களால் அப்பிராந்தியத்தில் மீன்பிடிக்கமுடியவில்லை.

இவ்வேளையில் காலநிலை சீராகவுள்ள தீவுப்பகுதிக் கடற்பிராந்தியத்தில் மீன்பிடி சீசன் நிலவிய பொழுதிலும் கடற்படையினரின் கெடுபிடிகள் காரணமாக அப்பகுதியிலும் கடற்றொழிலாளர்கள் கடலுக்குச் செல்வது மிகவும் குறைவு.

கடற்கொந்தளிப்பு நிலவும் பகுதிக் கடற்றொழிலாளர்கள் இக்கால சீசனில் தீவுப் பகுதிக்கு இடம் பெயர்ந்து சென்று மீன் பிடிப்பது வழக்கம். ஆனால் கடற்படையினரின் தாக்குதல்களுக்கு அஞ்சி அவர்கள் அங்கு செல்லவில்லை. இதன் காரணமாகவே குடாநாட்டில் மீனுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. (50, 43


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

ஆறுமுகம் மீனாச்சி
ஆறுமுகம் சுப்பிரமணியம்

மண்ணில்: விண்ணில்:

தாய்: 21 - 09 - 1907 மகன்: 03 - 10 - 1990
மகன்: 22 - 02 - 1926 தாய்: 10 - 10 - 1990

திதி:- 09 - 11 - 1990

பொங்கும் நினைவுகள்
எங்களை வாட்டுதே
உங்கள் பிள்ளைகள்
எங்கு என்று கேட்டால்
நாங்கள் என்ன பதில் சொல்ல.

எஸ். பிரசாத், உங்கள் பிரிவால் துயருறும்,
கோவளம், குடும்பத்தினர்.
காரைநகர்.

11035



## புதிய உயர்கல்லூரி

யாழ்ப்பாணம்

## 10-11-90 மீண்டும் ஆரம்பம்

★ 90, 91, 92 A/L கலை, வர்த்தக வகுப்புக்கள்

★ 90, 91 G. A. Q வகுப்புக்கள்

★ 90, 91 B. A. வகுப்புக்கள்
யாவும் அன்றைய தினம் ஆரம்பமாகும்.

10, 11. 90 (சனிக்கிழமை) காலை 8.00 மணிக்கு எமது நிலைய மாணவர்கள் அனைவரையும் சமூகமளிக்குமாறு வேண்டுகின்றோம்.

நிர்வாகி
திருமதி S. அருள்நங்கை

11048

[illegible] நூலகம்

# தீவகச் செய்திகள்

## சரணாலயத்தில் வெளிநாட்டுப் பறவைகள்

மண்டைதீவு, அல்லைப்பிட்டி முக்கோண சதுப்பு நில கடற்பிராந்தியத்தில் நிறுவப்பட்ட செல்வம் ஞாபகார்த்த பறவைகள் சரணாலயத்தில் தற்போது பெருந்தொகையான உள்நாட்டு வெளிநாட்டுப் பறவைகள் வந்து குவிந்துள்ளதுடன் இனப்பெருக்கமும் செய்து வருகின்றன. வீரமரணமடைந்த விடுதலைப்புலிகள் இயக்கப்போராளி செல்வம் (பகீன்) ஞாபகார்த்தமாக மேற்படி பறவைகள் சரணாலயம் பிரகடனப்படுத்தப்பட்டது தெரிந்ததே.

## தரமற்ற மண்ணெண்ணை

அண்மையில் தீவுப்பகுதி மக்களுக்கு அரசால் நிவாரணமாக வழங்கப்பட்ட மண்ணெண்ணை தரமற்றதென பலரும் புகார் தெரிவிக்கின்றார்கள்.

இம்மண்ணெண்ணை விளக்குகளிற்கு விடும்போது திரிகள் கருகுவதாகவும், மங்கிய வெளிச்சம் தருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## 'சண்முகப்பிரியா' வெளியீடு

வேலணை கல்விக் கோட்ட கல்வி அதிகாரியாகவிருந்து மரணமடைந்த 'அமரர் சு. சண்முகநாதன் அவர்களின் ஞாபகார்த்தமாக 'சண்முகப்பிரியா' என்னும் ஞாபகார்த்த வெளியீடொன்றை வேலணை கல்விக்கோட்ட ஆசிரியர்கள் வெளியிட்டுள்ளனர்.

இதன் முதற்பிரதியை கல்விக் கோட்ட கல்வி அதிகாரி நா. க. சண்முகநாதபிள்ளையிடமிருந்து ஓய்வுபெற்ற ஆசிரியர் சு சிவரத்தினம் பெற்றுக்கொண்டார். (24)

## பாடசாலைகள் வழமை போல்

புங்குடுதீவு கொத்தணிக்குட்பட்ட பாடசாலைகள் தற்போது இயங்கி வருவதாகவும் மாணவர்களின் தொகையும் கணிசமான அளவு அதிகரித்துள்ளதாகவும் புங்குடுதீவு கொத்தணி அதிபர் சு யோ பூராசா தெரிவிக்கின்றார்.

இதேவேளை புங்குடுதீவு பகுதியில் பாடசாலைகளில் மாலைவேளை இலவசமாக பல ஆசிரியர்கள் மாணவர்களுக்கு கல்வி போதித்து வருகின்றார்கள். (24)

# கிளிநொச்சி கிராமங்களில் மூளைக்காய்ச்சல் நோய் பரவுகிறது

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது மூளைக்காய்ச்சல் நோய் வெகு வேகமாகப் பரவி வருகிறது.

இப்பகுதியில் தற்போது நுளம்புப் பெருக்கம் அதிகரித்துள்ளதாலும், சுகாதாரக் குறைபாடு நிலவுவதாலும் மூளைக்காய்ச்சல் நோயைக் கட்டுப்படுத்துவது சிரமமாகவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வெளி மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்தோர் தங்கியுள்ள முகாம்களில் அதிகளவில் நோய்கள் பரவி வருவதும் திருமலையிலிருந்து அகதிகளாக வந்து அக்கராயன் கரும்புத்தோட்ட முகாமில் வசித்துவந்த குடும்பப்பெண்மணி ஒருவர் மூளைக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டு கிளிநொச்சி அரச மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மரணித்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது (35)

# போலி கிறைப் வாட்டர் மக்களுக்கு எச்சரிக்கை

போலி கிறைப் வாட்டர் விற்பனை செய்யப்படுகின்றது என்ற புகாரையடுத்து சுன்னாகம், பண்டத்தரிப்பு, மானிப்பாய் ஆகிய பகுதிகளில் உள்ள கடைகளைப் பரிசோதனையிட்ட உணவு மருந்து பரிசோதனைக்குழுவினால் எஸ். 'டயமன்' என்ற பெயரில் அனுமதியற்ற போலி கிறைப் வாட்டர் விற்பனை செய்யப்பட்டது கண்டு பிடிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அவை விற்பனை செய்வதும் தடை செய்யப்பட்டுள்ளது

இவ்வகைக்கிறைப் வாட்டரை உற்பத்தி செய்வதற்கு அனுமதி அளிக்கப்படவில்லை என்பது விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது. இதற்கு என்ன கலவைகள் சேர்க்கப்பட்டுள்ளன என்பதும் தெரியவில்லை. எனவே இவ்வகை கிறைப் வாட்டரை வாங்க வேண்டாம் என மக்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

இவ்வகை எஸ். டயமன் அடையாளம் இடப்பட்டுள்ள கிறைப் வாட்டர் வைத்திருப்பவர்கள் அவற்றை விற்பனை செய்ய வேண்டாம் என யாழ் மாவட்ட உணவு மருந்துப் பரிசோதகர் எச்சரிக்கின்றார்.

### ராணுவ ஆக்கிரமிப்புக்குள்

# கால் ஊனமான தாயும், பச்சிளம் பிள்ளைகளும்

இராணுவ நடவடிக்கையால் வெளியேற முடியாமல் இருக்கும் தையிட்டிப் பொது மக்களுள் கால் ஊனமான தாயான வே. பராசக்தி (வயது 30) அவரது 2 பிள்ளைகளான வே. நரேந்திரன் (வயது 1½) வே. சரநேசன் (வயது 3) ஆகியோரும் அடங்குவர்.

இப்பகுதிக்கு இராணுவம் அடுத்த வேளை துப்பாக்கி வேட்டுக்களின் மத்தியிலும் தனது மற்றைய 2 பிள்ளைகளை சைக்கிளில் ஏற்றிவந்து தெல்லிப்பளையில் விட்டபின்பு மீண்டும்தனது மனைவியையும் மற்றைய 2 பிள்ளைகளையும் மீட்பதற்கு தையிட்டிக்கு சென்றபோது அப்பகுதிக்குள் நுழைய முடியாமல்போயிற்று என்று மனைவியையும் இரண்டு சிறுபிள்ளைகளையும் காணமுடியாமல் ஏ. வேலாயுதம் மிகுந்த வேதனையுடன் தெரிவித்தார். (ப-10)

### இந்திய அரசியல்: காட்சி மாறுகிறது



# லோக்சபாவிலிருந்து ராஷ்டிரபதிபவனுக்கு!

## - அடுத்த சில நாட்கள்: சில சிந்தனைகள்

இந்தியாவின் நடப்பு அரசியல் நாடகத்தின் ஒரு விறுவிறுப்பான காட்சி எதிர்பார்த்தபடியே முடிந்துள்ளது. வி. பி. சிங் ஆட்சி தோற்கடிக்கப்பட்டுவிட்டது. அவர் ராஜினாமா செய்தும்விட்டார்.

அடுத்து என்ன நடக்கும்? சோதிடம் முதல் சரித்திரம் வரை பலகோணங்களிலிருந்து இது பற்றிய 'ஆய்வு' இந்தியப்பட்டிதொட்டிகளிலெல்லாம் நடைபெறப் போகின்றது.

ஒன்று நிச்சயம்: நடந்தேறிய காட்சியோ, அடுத்து வரவிருக்கும் காட்சியோ இந்த நாடகத்தின் இறுதிக்காட்சிகள் அல்ல. நடந்தது இறுதிக்காட்சியல்ல என்பது மாத்திரமல்ல, காட்சியின் 'செட்டிங்'கும் மாறிவிட்டது என்பதும் தெரிகிறது.

### வெங்கட்ராமன் என்ன செய்வார்?

லோக்சபாக் க(ா)ட்சியாட்டங்களின் பின்னர், நிகழ்ச்சிகள் அடுத்து ராஷ்டிரபதிபவன் பின்னணியிலே நடைபெறப்போகின்றன.

ஜனாதிபதி வெங்கட்ராமன் 'என்ன செய்வார்' என்பதிலும் பார்க்க 'என்ன செய்யமாட்டார்' 'என்ன செய்யக்கூடாது' என்பது பற்றிய அரசியல் ஹேஷ்யங்கள் அடுத்த சில நாட்களுக்கு முக்கிய இடம் வகிக்கப் போகின்றன.

இந்தக்காட்சியின் பிரதான சிக்கல், பொதுத்தேர்தல் அவசியமா இல்லையா என்பது அல்ல; பொதுத்தேர்தல் எவ்வளவு காலத்துக்குப் பின் போடப்படலாம் என்பதே.

### இந்திரா காங்கிரஸ்

லோக்சபாவில் அதிக பலமுள்ள கட்சியின் தலைவர் ராஜீவ்காந்தி, அரசாங்கம் அமைக்க மாட்டார். (இந்திய ஜனநாயகம் அவர்காலில் விழுந்து ''நான் செய்ததை மறந்து தாங்களும் தங்களைப்போன்ற இந்திரா வாரிசுகளுமே என்னை ரட்சிக்க வேண்டும்'' என்று கேட்கும் வரை அவர் கட்சி அமைக்க மாட்டாராம்)

### சந்திரசேகர் -- எதுவரை?

தேவிலால் கோஷ்டியுடன் இணைந்து வி. பி. சிங்கை வீழ்த்திய சந்திரசேகர் ஆட்சியமைத்தாலும் அது இந்திரா காங்கிரசின் ஆதரவையே நம்பிநிற்கும். மண்டல் கமிஷன் கனவுகளும், பாபர் மசூதி ஞாபகங்களும் இந்திய வாக்காளப் பெருமகன் மனதில் இப்பொழுது இல்லையென்று ராஜீவ்காந்தி கருதும் நேரத்தில் சந்திரசேகர் ஆட்சி (வருமேல்) கவிழும்.

### தேர்தலை பாரதம் தாங்குமா?

எனவே தேர்தல் எப்பொழுது வருமென்பது தான் முதற்பிரச்சினை. இன்றைய சூழலில் ஒரு பொதுத்தேர்தலை உடனடியாகநடத்துவ துஎன்பதுபற்றி ஆழ்ந்துசிந்திக்க வேண்டிய பொறுப்பு ராஷ்டிரபதிபவனின் பிரதான ஆசனத்தில் இருப்பவருக்கு உண்டு.

கடந்த் ஒரு வருடகாலமாக வட-இந்தியாவில் நடந்துள்ள கொலைகள், சண்டைகள், பலாத்காரங்களைத் தொடர்ந்து கட்சிகளின் பலப்பரீட்சைக்கான ஒரு தேர்தலை உடனே நடத்துவதை இந்தியாவினால் தாங்கிக்கொள்ள முடியுமா? வட-இந்தியாவில் தேர்தல் என்பது வாக்கெடுப்புக்கு மாத்திரமல்ல வாளெடுப்புக்கும் இடம் கொடுப்பது; வன்செயல்களுக்கு இடமளிப்பது. (சௌதாலாவின் வீரப்பிரதாபங்களை வாசகர்கள் மறந்திருக்க மாட்டார்கள்)

அது மாத்திரமல்லாமல், வளைகுடாப் பிரச்சினை வழியாகக் கிளம்பியுள்ள பாரிய பொருளாதாரப் பளுவினை இந்தியா தாங்கிக்கொள்ள முடியாதுள்ளது இவ்வேளையில் அரசியல் பிளவுகளை மேலும் பெருப்பிப்பது சரியா என்ற ஒரு வாதமும் உண்டு.

### ஜனாதிபதியின் நிலை

மேலும் இந்தியத் தேர்தல் நடந்து இன்னும் ஒருவருடம் பூர்த்தியாகவில்லையே.

இந்திய ஜனாதிபதியின் நிலை மிகச் சிக்கலான ஒன்றுதான். அவரெடுக்கும் முடிவு பாரதூரமான விளைவுகளை உடையதாகவிருக்கும் ஜனாதிபதி வெங்கட்ராமனின் முன்னுள்ள சவால்களைப்பற்றி நோக்குவதன் முன்னர் நடந்த காட்சியில் நிகழ்ந்தேறியவற்றைத் தொகுத்து நோக்குதல் வேண்டும்.

### வஞ்சம் தீர்த்த கதை

தங்கள் ஒவ்வொருவரினதும் அரசியல் ஆசைகளில் மண்போட்ட வி பி. சிங்கை தேவிலால், சந்திரசேகர், ராஜீவ்காந்தி ஆகியோர் சேர்ந்து வஞ்சம் தீர்த்துக்கொண்டுவிட்டனர்.

இந்திரா காங்கிரஸ் என்னதான் மதச்சார்பின்மை பற்றிப் பேசினாலும் வடக்கில், செல்வந்த விவசாயிகளின் செல்வாக்கைப் புறக்கணித்து நடக்கமுடியவில்லை. பி. ஜே. பிக்குச் சில இடங்களில் ஆதரவு கொடுப்பதிலிருந்து இது தெரிகிறது.

மற்றது உண்மையில் இந்திய ஆட்சி என்பது இந்தி மாநில மேலாண்மைதான் என்று கருதும் வட இந்தியச் செல்வந்த விவசாயி வர்க்கம்தான் வெற்றியீட்டியுள்ளது. தனக்கெதிராகக் விடுககப்பட்ட பயமுறுத்தல்களை அது முளையிலேயே கிள்ளிவிட்டதாக நினைக்கின்றது.

### வி. பி. சிங் அழைத்த பூதம்

ஆனால், வி. பி. சிங் வெட்டிய கிணற்றிலிருந்து புறப்பட்ட பூதம் புறப்பட்டதுதான். மண்டல் கொமிஷன் சிபார்சு என்ற கோஷம் பல அதிகார அத்திவாரங்களை அசைக்கப் போகின்றது.

நிச்சயமாகத் தென்னிந்தியா அடுத்த தேர்தலில் முந்திய தேர்தல் முடிவினைப் பிரதி செய்யாது ஆனால் அதே வேளையில் தேசிய, சர்வதேசிய நிலைமைகள் இந்திய இடதுசாரி ஒற்றுமையை மேலும் வலுப்படுத்தப்போவதில்லை. வி பி சிங் மீண்டும் அதிகாரத்துக்கு வருவது நிச்சயமற்ற ஒன்றே.

### இக்கட்டான நிலையில் ஜனாதிபதி

இவ்வாறான அகண்ட பின்னணிகளில் வைத்து நோக்கும்பொழுதுதான் ஜனாதிபதியின் நிலை மிகமிக இக்கட்டானது என்பது தெரிகிறது.

இந்திய ஜனாதிபதி முன்னுள்ள தர்மப் பிரச்சினை இதுதான்; நீடிக்க முடியாதது என நிச்சயமாகத் தெரிந்த ஒன்றை நிலை பெறச் செய்வதா 43 வருடகால இந்திய பாராளுமன்ற ஜனநாயகப் பாரம்பரியத்தை அரசியல் ஒட்டு வேலைகள் மூலம் தக்கவைத்துக் கொள்ளலாமா?

இந்தியப் பாராளுமன்ற ஜனநாயகப் பாரம்பரியத்தைக் காத்துக்கொள்ளும் பணி

எமது அரசியல் விமர்சகர்
க. மா. இராசையா

சம்பந்தமாக ஜனாதிபதி வெங்கட்ராமனிடத்துள்ள சாதக, பாதக அமிசங்களை கணக்கிட்டுக்கொள்ளல் வேண்டும்.

வெங்கட்ராமன் இந்திராகாங்கிரஸ் வழியாக வந்தாலும், தான் கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டவர் என்பதை நன்கு நிரூபித்துள்ளவர். அத்துடன், டில்லியில் இன்றுள்ள அரசியலாளர்களுள் முதிர்ச்சியும்நுட்பத்திறனுமுள்ளவர் என்பது சகலராலும் ஏற்றுக்கொள்ளப்படும் ஒன்றாகும்.

ஆனால், அரசியற் களத்தில் அவருக்கு எத்தகைய முக்கிய இடமிருப்பினும், அவர் அடிப்படையில் வட இந்தியப் பிரபலஸ்தர் அல்லர். அவர் தென்னிந்தியர்.

### வெங்கட்ராமன் முன்னுள்ள பணி

இந்திய ஜனநாயகத்தின் ஆரோக்கியமான மன வளர்ச்சி இன்று இவரது கையிலே தான் உள்ளது.

கட்சித் தலைவர்கள் தங்கள் இலாபத் தேட்டத்துக்கேற்ற முறையில் தேர்தலை நிர்ணயிப்பதற்கு இவர் இடமளிப்பாரா என்பது முக்கியமான ஒரு-கேள்வி.

இந்திய ஜனநாயகத்தின் ரட்சிப்பு இன்று ஒரு தமிழனின் கையில் உள்ளது என்பது திருப்தியைத் தருகிறது. அந்தப் பணியை அவர் சிறப்புடன் ஆற்ற வேண்டுமே என்ற ஆதங்கமும் மேலோங்குகின்றது.

### தப்பித்துக் கொள்வதல்ல; முகங்கொடுப்பது

இன்னும் ஒன்று, இந்திய ஜனநாயகம் இந்தச் சிக்கலிலிருந்து விடுபட வேண்டுமெனில் அந்தப் பிரச்சினையிலிருந்து தப்பித்துக் கொள்ளப் பார்க்காமல் அதனைத் தன்னம்பிக்கையுடன் முகம்கொடுத்து எதிர்நோக்க வேண்டும்.

நீந்தப் படிப்பதற்கு ஒரே வழி நீந்துவது தான்; நீந்துவது எப்படி என்று தண்ணீருக்கு வெளியே நின்று ஆராய்ச்சி செய்வதல்ல

இந்தியாவும் முழு உலகும் ஒரு தஞ்சாவூர்த் தமிழ்ப் பிராமணப் பெருமகனின் தீர்ப்பை எதிர்பார்த்து நிற்கின்றன.

## உலக அரங்கில்

### பிரதமராகும் வாய்ப்பு சந்திரசேகருக்கு அதிகரிக்கிறது

**காங்கிரஸ் ஆதரவு**

திரு சந்திரசேகர் புதிய அமைச்சரவையை அமைக்க இந்திரா காங்கிரஸ் ஆதரவளிக்கும். இது குறித்து ஜனாதிபதி வெங்கட்ராமனுக்கு இந்திரா காங்கிரஸ் தலைவர் ராஜீவ்காந்தி உத்தியோக பூர்வமாக நேற்று அறிவித்தார்.

**அமைச்சரவை அமைக்க காங்கிரஸ் மறுப்பு**

முன்னதாக ராஜீவ்காந்தியை அமைச்சரவையை அமைக்கும்படி கோரி ஜனாதிபதி இந்திரா காங்கிரஸுக்கு அழைப்பு விடுத்திருந்தார். எனினும் பொதுமக்களின் வாக்கு இல்லாது தாம் அமைச்சரவையை அமைக்க முடியாது எனத் தெரிவித்த ராஜீவ்காந்தி, சந்திரசேகருக்குத் தனது ஆதரவைத் தெரிவித்தார்.



எனினும் சந்திரசேகர் இன்னமும் அமைச்சரவை அமைப்பது குறித்து ஜனாதிபதி வெங்கட்ராமனுடன் பேச்சுக்கள் நடாத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**சந்திரசேகர் அமைச்சரவை குறித்து ஆலோசனை**

எனினும் சந்திரசேகருக்கான ஆதரவை இந்திரா காங்கிரஸ் உத்தியோகப் பூர்வமாக அறிவித்ததைத் தொடர்ந்து திரு. சந்திரசேகர் அமைச்சரவையை எவ்வாறு அமைப்பது என்பது குறித்து ஆலோசனை நடாத்தி வருகிறார்.

**வி. பி. சிங் இடைக்காலப் பிரதமரானார்**

இதனிடையே மாற்று ஏற்பாடுகள் செய்யும்வரை வி.பி. சிங்கை இடைக்காலப் பிரதமராகப் பதவி வகிக்குமாறு ஜனாதிபதி கோரியுள்ளார்.

**வி. பி. சிங், இடதுசாரிகள் கண்டனம்**

திரு. சந்திரசேகரைப் பிரதமராக்குவது குறித்து வி.பி. சிங்கும் இடதுசாரிக் கட்சிகளும் நேற்றுக் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

**ராஜீவ்காந்தி கருத்து**

சந்திரசேகருக்கான ஆதரவு குறித்துக் கருத்து வெளியிட்ட ராஜீவ்காந்தி ''சந்திரசேகர் முன்னாள் இந்திரா காங்கிரஸ் உறுப்பினர், அவரால்தான் சமூக நீதியை நிலைநாட்டக்கூடிய அமைச்சரவையை அமைக்கமுடியும் இதற்கு இந்திரா காங்கிரஸ் எவ்வித முன் நிபந்தனையும் இன்றித் தனது ஆதரவை வழங்க முடிவு செய்துள்ளது. பாரதிய ஜனதாவுடன் கூடிக்குலாவிய வி. பி. சிங் போலல்ல சந்திரசேகர்'' எனக் குறிப்பிட்டார்.

**புதிய வீடு கேட்கிறார் வி. பி. சிங்**

இதனிடையே தாம் வசிப்பதற்குத் தனியான ஓர் வீட்டை ஏற்பாடு செய்து தரும்படி வி. பி. சிங் கோரியுள்ளார். பிரதமர் பதவியில் இருந்து விலகிவிட்டதால் தொடர்ந்து 'பிரதமர் இல்லத்தில்' இருக்க முடியாது என அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை நேற்று முன்தினம் நடைபெற்ற நம்பிக்கைத் தீர்மானம் வாக்கெடுப்பின்போது அளிக்கப்பட்ட வாக்குகளின் சரியான எண்ணிக்கை விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது. பிரேரணைக்கு ஆதரவாக 151, வாக்குகள் எதிராக 356 வாக்குகள் நடு நிலை வகித்தவர்கள் 6 பேர் 524 லோக் சபா றுப்பினர்களில் 513 உறுப்பினரே வாக்களிப்பில் கலந்துகொண்டனர்.

---

**ஜே. வி. பி. பதில் சுவரொட்டி!**

### 'தமிழர்களைக் கொழும்பிலிருந்து வெளியேற்றினால் ஆபத்து வரும்'

கொழும்பு நகரில் ஒட்டப்படும் சுவரொட்டிகளுக்குத் தற்பொழுது அந்தச் சுவரொட்டியிலேயே பதிலும் எழுதப்பட்டு வருகின்றது.

''தமிழர்களை வெளியேற்றினால் ஆபத்து வரும்'' இப்படியொரு அடிக்குறிப்பு கொழும்பு மாநகரில் ஒட்டப்பட்ட சுவரொட்டிகளின் கீழ் தற்பொழுது புதிதாகக் காணப்படுகின்றது.

'இம்மாதம் 10-ம் திகதிக்கு முன்னர் கொழும்பில் உள்ள தமிழர்கள் அனைவரும் வெளியேறிவிட வேண்டும்' என ஒட்டப்பட்டுள்ள அநாமதேய சுவரொட்டிகளின் கீழேயே இப்புதிய அடிக்குறிப்புக்கள் காணப்படுகின்றன.

இந்த அடிக்குறிப்புக்களை ஜே. வி.பியினர் எழுதியதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

---

சுயவிருப்பின் பேரில் இளைப்பாறுதல் விண்ணப்பப்படிவத்தினை கிளிநொச்சியில் திரு, எஸ். சின்னத்துரை அன் சன்ஸில் பெற்றுக்கொள்ளலாம்.

---

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ். கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மிபில்டிங்' இல் உள்ள அச்சகத்தில் 09-11-90 அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

---

**கொழும்பு தலைமையலுவலகம் அறிவித்துள்ளது**

## தொலைத் தொடர்புத் திணைக்கள ஊழியருக்கு சம்பளம் கிடையாது

யாழ் மாவட்டத்திலுள்ள தொலைத் தொடர்புகள் திணைக்களத்தைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள், ஊழியர்களது சம்பளம் வழங்கமுடியாது என கொழும்பிலுள்ள தலைமையகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆனி மாதம் தொடக்கம் இவர்களுக்கு வேதனம் வழங்கப்படவில்லை. இதனையடுத்து சம்பளப் பணத்தை எடுத்துவர இவ்வலுவலகத்தைச் சேர்ந்த உத்தியோகஸ்தர் ஒருவர் கொழும்பு சென்ற போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

தற்போதுள்ள இராணுவ நடவடிக்கைகளின் போது மரணமான இத்திணைக்கள ஊழியர்கள், வடக்குக் கிழக்கில் தீவிரவாத நடவடிக்கையில் தொடர்புடையவர்கள், தற்போது திணைக்களத்தில் உள்ளவர்கள் போன்ற விபரங்களை அனுப்பி வைக்குமாறும் அதன் பின்னரே சம்பளம் வழங்குவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தலைமை அலுவலகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளதாம். (66)

---

**மாவிட்டபுரத்தில் ராணுவம் மீது தாக்கு-**

நேற்று முன்தினம் மாவிட்டபுரத்தில் இருந்து காங்கேசன்துறை நோக்கிச் செல்ல முயன்ற போது விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலைத் தொடர்ந்து ராணுவம் தனது முயற்சியைக் கைவிட்டது.

### மாவீரர் நாள் ஒழுங்கமைப்புக் கலந்துரையாடல்

யாழ்மாவட்டக் கூட்டுறவாளர்கள் நடாத்தும் தமிழீழ மாவீரர் நாள் ஒழுங்கமைப்பு முன்னேற்றம் சம்பந்தமான கலந்துரையாடல் சங்கப்பிரதிநிதிகள் மட்டத்தில் எதிர்வரும் 12-ம் திகதி திங்கள் காலை 10 . 30 மணிக்கு திருநெல்வேலி விவசாய போதனாசிரியர் பாடசாலையில் நடைபெற இருப்பதால் சங்கப்பிரதிநிதிகள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ் மாவட்ட விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி மாதிரி நிர்வாகச் செயலக கூட்டுறவுப் பகுதியினர் கேட்டுள்ளனர். (66)

---

**குவைத்திலிருந்து...**

யாழ் செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்தில் இந்த உதவிகளைப் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்களைப் பெறலாம் எனவும் அவர் தெரிவீத்தார்.

இதே வேளை சுமார் 5000ற்கும் மேற்பட்டவர்கள் குவைத்திலிருந்து வடபகுதிக்குத் திரும்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.(70,74)

---

**மன்னார்...**

கூடாததையடுத்து மேலதிக ராணுவத்தினர் மூன்று படகுகளில் வந்து தாக்குதலுக்குள்ளான இருபடகுகளையும் கட்டி இழுத்துச் சென்றன.

இச்சம்பவத்தில் படையினரின் உயிரிழப்பு எண்ணிக்கை குறித்து தெரியவரவில்லை.

---

**இப்படியும்...**

முறையில் இவ்வாசிரியை பேசுவது தமக்கு அவமானமாக இருப்பதாக மாணவிகள் தெரிவித்து வகுப்புக்களுக்கு வர தயங்குகின்றனர். இது குறித்து அதிபரிடம் பெற்றோர் முறையிட்டும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனத்தெரிவிக்கப்படுகிறது.

---

**யாழ்...**

தபாற்சேவை சீரின்மை மற்றும் சூழ் நிலைகளை விளக்கி எழுதியுள்ள கடிதத்தை நேரடியாக பணிப்பாளரிடம் கையளித்து திகதி நீடிப்பதற்கான அனுமதியைப் பெற்றுவர விரிவுரையாளர் ஒருவரை கொழும்புக்கு அனுப்பியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (66)

---

**ஆசிரிய கலாசாலைத் தெரிவு**

### கொழும்பில் நேர்முகப் பரீட்சை வட-கிழக்கிலும் நடைபெறுமாம்

ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் 1990-91-ம் கல்வியாண்டில் பயிற்சி பெறுவதற்கென விண்ணப்பித்த தமிழ் மொழி மூலமான ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சை தற்பொழுது ஆரம்பமாகியுள்ளது.

பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் இம் மாதம் 22-ம் திகதிவரை இந்த நேர்முகப் பரீட்சை நடைபெறும்.

வடக்குக் கிழக்கிலிருந்து தற்போதைய போக்குவரத்து சீர் குலைவு காரணமாக நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றமுடியாதுள்ளோருக்கென மற்றொரு நேர்முகப் பரீட்சை அந்தந்த மாவட்டங்களில் நடாத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### தெல்லிப்பழை வைத்தியசாலை மானிப்பாயில் இயங்கும்

தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலை மானிப்பாய் கிறீன் மெமோறியல் வைத்தியசாலையில் தற்காலிகமாக இயங்கவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

மானிப்பாயில் இயங்கிவந்த யாழ் போதனா வைத்தியசாலை இன்று முதல் இடமாற்றம் செய்யப்படுவதை அடுத்தே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வலி. வடக்கு இராணுவ நடவடிக்கைகள் காரணமாகத் தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலை மூடப்பட்டு தற்பொழுது சங்கானையில் இயங்கிவருவது தெரிந்ததே.

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் தெல்லிப்பழை வைத்தியசாலை மானிப்பாயில் இயங்கத் தொடங்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (70, 74)

### வவுனியாவில் முஸ்லிம்காடையரால் யாழ் லொறிமறிக்கப்பட்டுகொள்ளை

வவுனியாப் பகுதியில் முஸ்லிம் காடையர்களின் அட்டகாசங்கள் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் லொறியொன்றைக் கடத்தி அதில் கொண்டு செல்லப்பட்ட பொருட்களும் ஒன்றரை இலட்ச ரூபா பணமும் அபகரிக்கப்பட்ட பின் லொறியைத் திருப்பி ஒப்படைப்பதற்கு ஆறு இலட்ச ரூபா தருமாறு இந்த முஸ்லிம் காடையர்கள் கோரியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பிரஸ்தாப லொறிமயிலிட்டி தெற்கைச் சேர்ந்த ஒருவருக்குச் சொந்தமானது. (ப-2)

### நோயாளர்க்கு உதவிப்பணம் தற்போது வழங்கப்படுகிறது

காசநோய், புற்றுநோய், தொழுநோய் ஆகியவற்றிற்கான உதவிப்பணம் தற்போது யாழ் மாவட்டத்திலுள்ள உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளால் வழங்கப்பட்டு வருகின்றன.

இதுவரை இப்பணத்தைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் அந்தந்தப் பிரிவு உதவி அரச அதிபர் அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இதே சமயம் பொதுசன உதவிப்பணம் இன்னும் உதவி அரசாங்க அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (66,37

---

**யுத்தம்...**

இந்திய பாராளுமன்றம் வழங்கிய தீர்ப்பை ஸ்ரீ லங்கா அரசும்மதிப்பதாகக்கூறினார்,

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் நடைபெறுவதாக ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகள் வெளியிட்ட அறிக்கை குறித்து செய்தியாளர்கள் கேட்டபோது, ''மனிதஉரிமைகுறித்துயாரும் அறிக்கை விடுவது சுலபம், இது எல்லாம் உண்மையாகிவிடாது. அரசு தற்போது வாழ்வா சாவா என்ற போராட்டத்தில் இருக்கின்றது. இப்போராட்டத்திற்கு யாரும் உதவ முன்வருவதில்லை என்றும் அவர் சொன்னார்.

---

**போதனா .**

இதே சமயம் இன்று காலை 7 மணியளவில் மானிப்பாயில் உள்ள நோயாளிகள் இங்கு இடமாற்றம் செய்யப்படுவார்கள். (70, 74. ப-11)

---

**மாவீரர்...**

னர் ந ாத்தும் எழுச்சி யாத்திரை கடந்த 3-ம் திகதி தேவரையாளி இந்துக்கல்லூரியில் இருந்து ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.